**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு.R.சரவண பாபு, பி.ஏ,.எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**
**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை**

R.E.A.No. 2 of 2026
in
R.E.P.No. 24 of 2025
in
O.S.No. 184 of 2002

1. பார்வதி (இறப்பு)
2. சக்திவேல்(இறப்பு)
3. V.ரவிச்சந்திரன்
4. V.சிவகுமார்
5. A.சசிகலா
6. S.சுஜிதா
7. S.சுஸ்மி ... மனுதாரர்கள்/D.H

/Versus/

1.டாக்டர். நந்தினி மணிவண்ணன்
2. M. சிவராமன்
3. M. பிரவீண் ..எதிர்மனுதாரர்கள்/J.D

இம்மனு 18.08.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன், அவர்கள் ஆஜராகியும், 1, 2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.பரமகுரு, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மேற்படி மனுவில் கட்டளை நிறைவேற்றார் உத்தரவை நிறைவேற்ற

வரும் பொழுது, நீதிமன்ற கட்டளை நிறைவேற்றாளர்களுக்கு உரிய பாதுகாப்பு கோரி காவல்துறை கண்காணிப்பாளருக்கு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் இந்த நிறைவேற்று மனுவில் 4 ஆம் மனுதாரர் என்றும், மற்ற மனுதாரர்களுக்காக இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், மனுதாரர்கள் பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல்செய்து இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் சுவாதீனம் பெறுவதற்காக நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இம்மனுவில் உள்ள நான்கு அயிட்ட சொத்துக்களில் 4 வதுஅயிட்ட சொத்தை மற்றும் நீதிமன்ற அமீனாவால் கடந்த 23.07.2026 ந்தேதி சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றும், மீதமுள்ள 3 அயிட்ட சொத்துக்களை சுவாதீனம் எடுக்க முடியவில்லை என்றும், மேலும் மனு சொத்தில் காட்டப்பட்டுள்ள 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் மேச்சேரி கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், அதனை சுவாதீனம் எடுப்பதற்காக நீதிமன்ற அமீனா முயற்சி செய்தபோது எதிர்மனுதாரர்களும் 3 ம் நபர்களும் ஒன்று கூடி அதனை சுவாதீனம் எடுக்க முடியாமல் தடுத்து விட்டனர் என்றும், மேலும் மேற்படி சொத்துக்கள் கதவுகள் வைத்து பூட்டப்பட்டுள்ளது என்றும்,மேற்படி கதவுகளின் பூட்டுகளை உடைத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி நீதிமன்ற அமீனா சுவாதீனம் எடுப்பதற்கும் நீதிமன்றம் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்கும் காவல்துறை உதவி தேவைப்படுகிறது என்றும், எனவே நீதிமன்றத்தார் அவர்கள் காவல் துறை கண்காணிப்பாளர், சேலம் மாவட்டத்திற்கும், தாவா சொத்து அமைந்துள்ள ஆள்வரைக்குட்பட்ட காவல்நிலைய ஆய்வாளருக்கும் உதவி புரிய உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், கடந்த 23.07.2026 ந்தேதி 4 வது அயிட்ட சொத்து நீதிமன்ற அமீனாவால் சுவாதீனம் எடுக்கப்பட்டது உண்மை என்றும், மற்ற அயிட்ட சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு வரவில்லை என்றும், மேலும் அசல் வழக்கு எண். 184/2002 யில் 1/8 பாக சொத்தாக பிரிய வேண்டிய நிலையில் 1/4 என குறிப்பிட்டு பிரதிவாதிகளை ஏமாற்றும்நோக்கத்தோடு உண்மைக்கு புறம்பாக தீர்ப்பு பெறப்பட்டது என்றும், மனு சொத்தில் தாவாசொத்தின் உண்மை நிலையை காட்டவில்லை என்றும், மேற்படி தாவாவின் உண்மை நிலை குறித்து தற்போதுதான் எதிர்மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், 6ம் எதிர்மனுதாரர் உயிரோடு இருக்கும் நிலையில் அவர் இறந்துவிட்டதாக அறிவிப்பு திருப்பப்பட்டுள்ளது என்றும் மேலும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள 2 வது அப்பீல் மனு 303/2007 கடந்த 08.11.2019 ந்தேதிதள்ளுபடி ஆன விவரம் தாமதமாகதான் தெரியும் என்றும், மேற்படி வழக்கினை மீண்டும் விசாரணைக்கு கொண்டு வருவதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கு மனுதாரர் ஆஜராவதற்காக 28.08.2006 ந்தேதி வாய்தா போடப்பட்டுள்ளது என்றும் உண்மைக்கு புறம்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தாக்கல்செய்துள்ள மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் தாவா சொத்தில் 4 வது அயிட்ட சொத்து கடந்த 23.07.2026 ந்தேதி

நீதிமன்ற அமீனாவால் சுவாதீனம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் மற்ற அயிட்ட சொத்துக்களை சுவாதீனம் எடுப்பதற்கு காவல் துறை உதவி வேண்டும் என்று நீதிமன்ற அமீனாவால் மேற்குறிப்பு செய்யப்பட்டு கட்டளை திருப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை பரிசீலனை செய்ததில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில்தாக்கல் செய்திருந்த 2 வது அப்பீல் மனு 303/2007 கடந்த 08.11.2019 ந்தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. தீர்ப்பை நிறைவேற்றும் நீதிமன்றத்திற்கு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதே தலையாய கடமையாகும். மனுதாரருக்கு விசாரணை நீதிமன்றத்தாலும், சென்னை உயர் நீதிமன்றத்தாலும் கிடைக்கப்பெற்றுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்படி தாவா சொத்தை சுவாதீனம் வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வழக்கின் தன்மையை கொண்டு பார்க்கையில் மனுதாரர்கள் தாவா சொத்தை சுவாதீனம் எடுப்பதை எதிர்மனுதாரர்கள் தடுத்து இடைஞ்சல் செய்து வருகிறார்கள் என்பது நீதிமன்ற அமீனா மூலமாக நன்கு அறிய முடிகிறது. எனவே, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கும் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கும் காவல் துறையின் உதவி அவசியமாய் தேவைப்படுகிறது என்பதை அறிய முடிகிறது. எனவே, நீதிமன்றம் வழங்கிய சுவாதீன உத்தரவை நிறைவேற்றும் பொருட்டு காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் நீதிமன்ற அமீனாவிற்கு உதவி புரிவதற்கும் சுவாதீனம் எடுப்பதற்கும் போதுமான காவலர்களை நியமித்து தாவா சொத்து அமைந்துள்ள காவல்நிலைய ஆய்வாளருக்கு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

**5.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.SARAVANA BABU Digitally signed by R.SARAVANA BABU

**சார்புநீதிபதி,**
**மேட்டூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

R.SARAVANA BABU Digitally signed by R.SARAVANA BABU

**சார்புநீதிபதி,**
**மேட்டூர்.**